Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 21, 2023 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 222

## ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் முக்கிய தளபதி சுட்டுக்கொலை



சென்னை, பிப்ரவரி 21 2023: ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் முக்கிய தளபதியான இம்தியாஸ் ஆலம் பாகிஸ்தானில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் முக்கிய தளபதியாக செயல்பட்டு வந்தவர் இம்தியாஸ் ஆலம். ஜம்மு காஷ்மீருக்குள் பயங்கரவாதிகளை ஊடுருவச் செய்வதிலும், அவர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கச் செய்வதிலும் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளார். மேலும், ஜம்மு காஷ்மீருக்குள் பிற பயங்கரவாத அமைப்புகள் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதற்கும் ஒங்கிணைப்புப் பணிகளை அவர் மேற்கொண்டு வந்துள்ளார். ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தலைவர் சையத் சலாஹுதீனுக்கு மிகவும் நம்பிக்கையான தளபதியாக இருந்து வந்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபரில் மத்திய அரசு இவரை சட்டவிரோத தடுப்புச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதியாக அறிவித்தது. ஜம்மு காஷ்மீரின் குப்வாரா பகுதிக்கு பயங்கரவாதிகளை ஊடுருவச் செய்வதில் இவர் முக்கிய பங்கு வகித்து வந்ததை அறிந்த மத்திய அரசு, இவர், ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் செயல் தளபதியாக இருந்து வந்ததையும் வெளிப்படுத்தியது. இந்நிலையில், இஸ்லாமாபாத்தின் ராவல்பின்டி பகுதியில் கடை ஒன்றின் வெளியே நின்றுகொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் இம்தியாஸ் ஆலத்தை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளார். நேற்று மாலை இந்த சம்பவம் நடந்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தைச் சேர்ந்த இம்தியாஸ் ஆலம், பாகிஸ்தானின் ராவல்பின்டியில் வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆதரவு 22; எதிர்ப்பு 12 பேர்
## மெரினாவில் பேனா நினைவுச் சின்னம்: கருத்து கேட்பு





சென்னை, பிப்ரவரி 21 2023: முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு, பேனா நினைவுச்சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டத்தில் பெரும்பான்மையானோர் ஆதரவு தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் ஆட்சி சாதனை மற்றும் எழுத்துப் பணியின் நினைவைப் போற்றும் விதமாக, சென்னை மெரினா கடலில் 137 அடி உயரத்தில் பேனா நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் இந்த பேனா நினைவுச் சின்னத்தை சென்றடைய கடற்கரையில் 290 மீட்டர் நீளத்திற்கும் கடலுக்குள் 360 மீட்டர் நீளத்திற்கும் பாலம் அமைக்கப்பட உள்ளது.

இந்நிலையில், பேனா நினைவுச் சின்னம் தொடர்பாக நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் விவரங்கள் வெளியாகி உள்ளன. கருத்துக் கேட்பு கூட்டத்தில், 34 பேர் மேடையில் பேசினர். இதில், 22 பேர் நினைவு சின்னம் அமைக்க ஆதரவாகவும் 12 பேர் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது.

அதன்படி, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த கல்யாணராமன், நொச்சிக் குப்பத்தைச் சேர்ந்த பெருமாள், திருவல்லிக்கேணி வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த வி.பி.மணி, மீனவர் அமைப்பின் வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த தனசேகர், ராயபுரத்தைச் சேர்ந்த இளங்கோ, அகில இந்திய பாரம்பரிய மீனவர் சங்க நிர்வாகி மகேஷ், பழவேற்காட்டைச் சேர்ந்த சகாயராஜ், காசிமேடு பகுதியைச் சேர்ந்த இளங்கோ, மீனவர் அமைப்பைச் சேர்ந்த காசிமேடு நாஞ்சில் ரவி, தமிழ்நாடு மீனவர் பேரவையைச் சேர்ந்த பார்த்திபன், நொச்சிக் குப்பத்தை சேர்ந்த தம்பிதுரை, விசைப்படகு உரிமையாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தி, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த பரமசிவம், மதுரையைச் சேர்ந்த பசும்பொன் பாண்டியன், மீனவர் கிராம சபையைச் சேர்ந்த ரூபேஷ் குமார் உள்ளிட்ட 22 பேர் பேனா சின்னம் அமைக்க ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்டப்பஞ்சாயத்து இயக்க பொதுச் செயலாளர் அருள் முருகானந்தம், ஆம் ஆத்மி கட்சியின் வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த சங்கர், பாஜக மீனவர் பிரிவைச் சேர்ந்த நீலாங்கரை முனுசாமி, தேசிய பாரம்பரிய மீனவர் சங்க ஒருங்கிணைப்பாளர் சேனாதிபதி சின்னத்தம்பி, மே 17 இயக்க திருமுருகன் காந்தி, சமூக செயல்பாட்டாளர் முகிலன், அகில இந்திய மக்கள் கட்சியைச் சேர்ந்த அண்ணாதுரை, மீனவர் மக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்த சங்கர், நாம் தமிழர் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் பிரபாகரன் உள்ளிட்ட 12 பேர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அதிலும் பேனா நினைவுச் சின்னம் அமைத்தால் உடைப்பேன் என, சீமான் பேசியதும் அப்படியே பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 5 மாதத்துக்குள் குடும்ப தலைவிகளுக்கு ரூ.1,000 உரிமைத்தொகை - உதயநிதி ஸ்டாலின் உறுதி




சென்னை, பிப்ரவரி 21 2023: 5 மாதத்துக்குள் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கப்படும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு ஆதரவு திரட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று மாலை ஈரோடு வந்தார். பின்னர் அவர் கணபதி நகர், நேரு வீதி உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களிடையே பேசும்போது கூறியதாவது:-

தந்தை பெரியாரின் பேரனுக்கு, கலைஞரின் பேரன் நான் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். கடந்த தேர்தலில் திருமகன் ஈவெராவை 9 ஆயிரம் வாக்குகளில் வெற்றி பெறச்செய்த நீங்கள், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனை 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்ய வேண்டும்.

அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதுதான் எடப்பாடி பழனிசாமி அடிமையாக இருந்தார் என்றால் இப்போதும் அடிமையாகத்தான் இருக்கிறார். பிரதமர் மோடி என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டு, யாருக்கும் உண்மையில்லாமல் இருக்கிறார்.

மோடியிடம் கட்சி பிரச்சினைக்காக பேச எடப்பாடி பழனிசாமியும், ஓ.பன்னீர்செல்வமும் போட்டிப்போட்டு ஓடிச்செல்வார்கள். எப்போதாவது மக்கள் பிரச்சினைக்காக சென்று இருக்கிறார்களா?. யோசித்து பாருங்கள்.

ஆட்சியில் இருந்தபோது 2 பேரும் ஒற்றுமையாக இருந்தார்கள். நீ முதலமைச்சர், நான் துணை முதலமைச்சர், நீ ஒருங்கிணைப்பாளர், நான் துணை ஒருங்கிணைப்பாளர். இப்படித்தான் ஆட்சியை நடத்தினார்கள். ஆட்சி போன அடுத்த நிமிடம் 2 பேரும் வீதியில் நின்று சண்டைபோட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

தி.மு.க. ஆட்சி அமைந்து கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகி இருக்கிறது. நம்முடைய தலைவர் சென்னையில் கிண்டியில் கிங்ஸ் மருத்துவமனை ரூ.240 கோடியில் 9 மாடியுடன் சுமார் 1000 டாக்டர்கள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டப்படும் என்று அறிவித்தார். பணிகள் முடிந்து விட்டது. விரைவில் முதலமைச்சர் அந்த ஆஸ்பத்திரியை மக்களுக்காக திறந்து வைக்க உள்ளார். மதுரையில் கலைஞர் நூலகம் ரூ.116 கோடியில் கட்டப்படும் என்று அறிவித்து கட்டும் பணிகள் முடிந்து விட்டன. டிசம்பர் மாதம் நிறைவடையும் என்று திட்டமிடப்பட்டது. ஆனால் 6 மாதத்துக்கு முன்பே முடிந்து விடும். ஜூன் 3ஹ் தேதி முதல்-அமைச்சர் திறந்து வைக்கிறார்.

கடந்த 2019-ம் ஆண்டு பிரதமர் மோடி மதுரைக்கு வந்தபோது ரூ.3 ஆயிரம் கோடியில் எய்ம்ஸ் ஆஸ்பத்திரி கட்டப்படும் என்று அறிவித்தார். அந்த எய்ம்ஸ் ஆஸ்பத்திரிக்கு இதுவரை ரூ.300 கோடி செலவு செய்ததாக அறிவித்து இருக்கிறார்கள். ரூ.300 கோடியில் கட்டப்பட்ட எய்ம்ஸ் ஆஸ்பத்திரி இதுதான் (பொட்டல் காடாக கிடக்கும் இடத்தின் படத்தை காட்டினார்). அங்கே இருந்தது ஒரே ஒரு செங்கல்தான் (செங்கல் எடுத்து மக்களிடம் காட்டினார்). அதையும் நான் எடுத்து வந்து விட்டேன்.

இந்த சூழலில் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா மதுரை எய்ம்ஸ் ஆஸ்பத்திரி 90 சதவீதம் பணிகள் முடிந்து விட்டது என்று அறிவித்து இருக்கிறார். இதுதான் பாரதீய ஜனதாவும், அண்ணா தி.மு.க.வும் மதுரைக்கு கட்டிக்கொடுத்த எய்ம்ஸ் ஆஸ்பத்திரி.

ஈரோடு மாவட்டத்துக்கு மட்டும் கனிமார்க்கெட், சத்தி ரோடு பஸ் நிலையம், சாலை மேம்பாட்டு பணிகள், வணிகவளாகம் என்று பல்வேறு பணிகள் நடந்து உள்ளன.

இந்த இடைத்தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஈரோட்டுக்காக ரூ.1,000 கோடியில் பல்வேறு திட்டங்களை தலைவர் அறிவித்து செயல்படுத்த உள்ளார்.

பெண்கள் மனதில் உள்ள கோரிக்கை என்ன என்று எனக்கு தெரியும். குடும்ப தலைவிகளுக்கு உரிமைத்தொகை ரூ.1,000 இன்னும் அதிகபட்சம் 5 மாதங்களுக்குள் வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுத்து உள்ளார்.

எனவே அன்போடு, பாசத்தோடு, உரிமையோடு, உங்கள் வீட்டு பிள்ளையாக, தலைவரின் மகனாக, கருணாநிதியின் பேரனாக உங்களிடம் கேட்கிறேன். கை சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டுகிறேன். இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மோசமான வானிலை, பனிமூட்டத்தால் ஜனாதிபதி திரவுபதி முர்மு நீலகிரி பயணம் ரத்து

சென்னை, பிப்ரவரி 21 2023: மோசமான வானிலை மற்றும் பனிமூட்டம் நிலவுவதால் ஜனாதிபதி திரவுபதி முர்முவின் நீலகிரி பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவியேற்ற பிறகு முதல் முறையாக 2 நாள் பயணமாக நேற்று தமிழகம் காலை தமிழகம் வந்தார். புதுடெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் நேற்று மதுரைக்கு வந்த அவர், மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.

அதன் பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் மாலையில் கோவைக்கு வந்தார். மகா சிவராத்திரியை முன்னிட்டு ஈஷா யோகா மையத்திற்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு வந்தார். அங்கு அவரை ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் வரவேற்றார். அங்குள்ள சூர்ய குண்டத்தில் தீபம் ஏற்றி வழிபட்டார். பிறகு தியான லிங்க சன்னதிக்கு சென்று தியானம் செய்தார். பின்னர் ஆதியோகி முன்பு கோலாகலமாக மகா சிவராத்திரி விழா தொடங்கியது. விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பங்கேற்று பேசினார். விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி, அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோரும் பங்கேற்றனர்.

விழாவில் பங்கேற்ற பின்னர் இரவு 9.15 மணி அளவில் அங்கிருந்து புறப்பட்டு கோவை ரேஸ்கோர்சில் உள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு வந்து தங்கினார்.

இன்று காலை கோவை விமான நிலையத்துக்கு காரில் சென்று அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் குன்னூர் வெலிங்டன் ராணுவ மையத்துக்கு சென்று போர் நினைவுச்சின்னத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி திரவுபதி முர்முவின் நீலகிரி பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மோசமான வானிலை மற்றும் பனிமூட்டம் நிலவுவதால் ஹெலிகாப்டரில் செல்ல முடியாத சூழல் இருப்பதால் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணியளவில் கோவை விமான நிலையத்தில் இருந்து ஜனாதிபதி திரவுபதி முர்மு டெல்லி புறப்பட்டு சென்றார்.

# வரைகோடுகளை எல்லாம் கடந்து கைக் குலுக்கி இருக்கிறேன்: தேசத்தை பாதுகாக்கவே காங்கிரசுக்கு ஆதரவு - மநீம கமல்ஹாசன்

சென்னை, பிப்ரவரி 21 2023: லாபத்துக்காக கூட்டணி வைக்கவில்லை; தேசத்தை பாதுகாக்கவே காங்கிரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளேன் என்று மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் கூறினார்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு கை சின்னத்தில் வாக்குகள் சேகரித்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நேற்று வீதி வீதியாக பிரச்சாரம் செய்தார். கருங்கல்பாளையம் காந்தி சிலை அருகே பிரசாரத்தை தொடங்கிய அவர் சூரம்பட்டி நால்ரோடு, சம்பத்நகர், பி.பி. அக்ரகாரம் பகுதிகளில் அவர் பிரசாரம் செய்து கை சின்னத்துக்கு வாக்குகள் சேகரித்தார்.

ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு கை சின்னத்தில் ஓட்டு வாங்குவதற்காக நான் இங்கே வந்திருக்கிறேன். என்ன வேற சின்னத்தில் வாக்கு கேட்கிறீங்க என்று கேட்டால், நாட்டுக்கு ஆபத்து என்று வரும்போது இதெல்லாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. சின்னம், கட்சி, கொடி இதையெல்லாம் தாண்டியதுதான் தேசம். அதை பாதுகாப்பதற்காகவே, காங்கிரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளேன்.

உணர்வு பூர்வமாக எனக்கும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கும் உறவு இருக்கிறது. இவர் பெரியாரின் பேரன். பெரியாரே ஒத்துக்கொள்ளாவிட்டாலும் நான் அவருடைய பேரன். அந்த அளவுக்கு அவரால் ஈர்க்கப்பட்டவன் நான். எனது அப்பா, ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் தந்தையின் ரசிகர். இந்த தொடர்பு எல்லாம் எனக்கு இருக்கிறது. நான் இங்கே வருவதற்கு அதுமட்டும் காரணம் இல்லை.

இந்த கூட்டணி இப்போது எதற்கு வைக்கிறீர்கள். என்ன லாபத்துக்காக என்று கேட்டால், நான் லாபத்தை எண்ணி அரசியலுக்கு வரவில்லை. எனக்கு தேவையான லாபத்தை நீங்கள் என் தொழிலில் ஈட்டித்தந்து இருக்கிறீர்கள். ஆக, நான் வந்தது என் கடமையை செய்வதற்காக. இந்த நாட்டிற்கான கடமையை செய்வதற்காக. தவிர, இது தமிழர்கள் தன்மானத்தை நிரூபிக்க வேண்டிய தேர்தல். அதில் நிரூபிக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. நாங்கள் உங்களுக்காக போராடுகிறோம்.

நாங்கள் முன்னணி போராளிகள். அதில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் முக்கியமானவர். உங்களுக்காகத்தான் நாங்கள் போராடுகிறோம் என்று நீங்கள் உணர வேண்டும். எங்களை அடக்கி ஆள முடியாது என்று தமிழகம் இப்போது இருக்கும் மையத்துக்கு (மத்திய அரசுக்கு) சொல்ல வேண்டும். மையம் என்றால் இந்த மய்யத்தை சொல்லவில்லை. நாட்டின் மையம் அங்கேதான் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். மக்கள்தான் மய்யம் என்று நம்புபவன் நான்.

பல முறை என் கருத்தை சொல்லி இருக்கிறேன். திடீர் என்று கருத்து மாற்றம் செய்யவில்லை. அதே கருத்து உடையவர்களுடன் இணைந்திருக்கிறேன். ஆபத்து காலத்தில் இதை எல்லாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இப்போது ஆபத்துகாலம். அதனால்தான் என்னுடைய வரைகோடுகளை எல்லாம் கடந்து வந்து இங்கே கை குலுக்கி இருக்கிறேன்.

இது லாபத்துக்காக வைத்திருக்கும் கூட்டணி அல்ல. அப்படி வந்திருந்தால் எனக்கு விஸ்வரூபம் படம் பிரச்சினை வந்தபோதே நான் வந்திருக்கலாம். அது எனது தனிப்பட்ட பிரச்சினை. இப்போது நான் வந்திருப்பது நாட்டுக்கான பிரச்சினை. அதனால் இங்கே வந்திருக்கிறேன்.

இந்த கூட்டத்துடன் இருப்பது எனக்குப் பெருமை. கொள்கைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களின் நலன்என்று வரும்போது, எது நியாயமோ, அதைச் செய்வதுதான் எங்கள் லட்சியம். ஒத்திகை பார்க்காமல், நான் யோசித்து விட்டுத்தான் இங்கு பேசுகிறேன். பலவிமர்சனங்களைக் கேட்டுவிட்டுத்தான், இது சரியான பாதை என்று தேர்ந்து எடுத்துள்ளேன். என் பயணத்தைப் பார்த்தால், பாதை புரியும்.

என்னைப்போல் நீங்களும் முன்வந்து கை சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். தமிழ்நாடு தனி சிந்தனை உள்ள நாடு என்பதை வாக்காளர்களாகிய நீங்கள் நிரூபிக்க வேண்டும். அதற்கான அரிய வாய்ப்பினை காலமும் கழகமும் வழங்கி இருக்கிறது.

இவ்வாறு கமல்ஹாசன் கூறினார்.

# அடுத்த வீட்டு இளைஞன் போன்று அறிமுகமாகி அடுத்த லெவல் வளர்ச்சியைத் தொட்டு தெலுங்கு திரையுலகை தெறிக்க விடும் கிரண் அப்பாவரம்

சென்னை, பிப்ரவரி 21 2023: புதுயுக கதைகள் மூலம் இளைஞர்களை ஈர்க்கும் இளம் மற்றும் நம்பிக்கைக்குரிய நடிகரான கிரண் அப்பாவரம் சுவாரசியமான திரைப்படங்களில் தொடர்ந்து நடித்து வருகிறார். இந்த வரிசையில், தெலுங்கு திரையுலகில் பெரிதும் மதிக்கப்படும் ஜிஏ2 பிக்சர்ஸ் பேனரில் கிரண் அப்பாவரம் நடித்துள்ள விறுவிறுப்பான குடும்பப் படமான 'வினரோ பாக்யமு விஷ்ணு கதா' (விஷ்ணுவின் கதையை கேட்டால் புண்ணியம்) தற்போது வெளியாகி பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. மகா சிவராத்திரியை முன்னிட்டு இப்படம் வெளியாகி உள்ளது. பெரிய தயாரிப்பு நிறுவனங்களுடன் பணிபுரிய வேண்டும் என்பது வளர்ந்து வரும் நடிகர்களின் கனவாகும். ஏனெனில், அவ்வாறு செய்வது அவர்களின் சந்தை மதிப்பை உயர்த்தவும், முன்னணிக்கு அவர்களை அழைத்துச் செல்லவும் உதவும். மிகவும் குறுகிய காலத்திலேயே பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் திரைப்படங்களில் நாயகனாக நடிக்கும் வாய்ப்பு கிரண் அப்பாவரமுக்கு கிடைத்துள்ளது. 'ராஜா வாரு ராணி காரு', 'எஸ்.ஆர். கல்யாண மண்டபம்', 'செபாஸ்டியன்',



'சம்மதமே' போன்ற படங்களில் ராயலசீமா வட்டார வழக்கில் வசன உச்சரிப்பு, நல்ல தோற்றம் மற்றும் சுறுசுறுப்பான நடிப்பால் அறியப்பட்ட இந்த இளம் நட்சத்திரத்தின் புகழ் அவரது முதல் படத்திலிருந்து தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக, முன்னணி நிறுவனங்களான மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் யூவி கிரியேஷன்ஸ் தயாரிப்பில் முறையை 'மீட்டர்' மற்றும் 'ரூல்ஸ் ரஞ்சன்' ஆகிய திரைப்படங்களில் கிரண் நடித்து வருகிறார். இவைத் தவிர இதரப் படங்களும் பட்டியலில் உள்ளன. மேலும், அவரது அசாத்தியமான நடிப்புத் திறமைக்காக தெலுங்கு திரையுலக முன்னணியார் பலர் அவரை ஆதரிக்கிறார்கள். அவரது தோற்றமும், நடிப்புத் திறமையும் அதிக எண்ணிக்கையிலான ரசிகர்களை நாளுக்கு நாள் ஈர்த்து வருகின்றன. மேற்கண்ட காரணங்களுக்காக, எளிய முறையில் தனது பயணத்தை தொடங்கிய கிரண் அப்பாவரம் தொடர்ந்து புதிய உயரங்களை எட்டி வருகிறார். இவரது படங்களுக்கு அதிக அளவில் செலவு செய்ய முன்னணி தயாரிப்பு நிறுவனங்கள் தற்போது தயாராக உள்ளன. அவரது முந்தைய படம் கலவையான விமர்சனங்களை பெற்றபோதும், இளைஞர்கள் மற்றும் குடும்ப ரசிகர்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை கிரண் தக்க வைத்துக் கொண்டுள்ளார். எளிமையான குணம், திறமையான நடிப்பு மற்றும் உண்மையான முயற்சிகளின் காரணமாக வலுவான ஒரு இடத்தை அவர் பெற்றுள்ளார். கிரணின் புதிய படமான 'வினரோ பாக்யமு விஷ்ணு கதா' அனைவரின் கவனத்தையும் பெற்றுள்ளது. ரசிகர்கள் மற்றும் திரையுலக வட்டாரங்களில் மற்ற பிப்ரவரி வெளியீடுகளை விட அதிக எதிர்பார்ப்பை இது ஏற்படுத்தி இருந்ததும், படக்குழுவினர் வெளியிட்ட பரபரப்பான டிரைலர் பார்வையாளர்களை உற்சாகத்தில் ஆழ்த்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. முன் வரிசையில் இடம் பிடிப்பதற்கு இன்னும் ஒரே ஒரு வெற்றி மட்டுமே தேவை எனும் நிலையில் இருந்த கிரண் அப்பாவரமுக்கு, எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் திரைப்படமாக 'வினரோ பாக்யமு விஷ்ணு கதா' அமைந்துள்ளது. இப்படத்தின் புதுமையான கதையம்சம் அனைவரையும் கவர்ந்து வருகிறது.

# சென்னை நகரில் 18 சாலைகள் குப்பையில்லா பகுதியாக அறிவிப்பு

சென்னை, பிப்ரவரி 21 2023: சென்னை மாநகராட்சியால் 66 கி.மீ நீளமுடைய 18 சாலைகளில் குப்பையில்லா பகுதிகள் என அறிவிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

இந்த சாலைகளில் 196 பேருந்து நிறுத்தங்கள் குப்பையில்லாமல் தூய்மையுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த 18 சாலைகளை குப்பையில்லாமல் பராமரிக்க 270 தூய்மைப் பணியாளர்கள் காலை மற்றும் மாலை என இருவேளைகளிலும் தூய்மைப்பணி மேற்கொண்டு வருகின்றனர். மேலும், 222 குப்பைத்தொட்டிகள் அமைக்கப்பட்டு தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. 52 வாகனங்கள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறன்றன.



இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 5,200 டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணாநகர் மற்றும் அம்பத்தூர் (சில பகுதிகள்) மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலும்,

உர்பேசர் மற்றும் சுமித் நிறுவனத்தின் சார்பில் தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலும், சென்னை என்விரோ நிறுவனத்தின் சார்பில் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் அம்பத்தூர் (சில பகுதிகள்) மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ.39 ஆயிரம் அபராதம் வசூல்

இந்நிலையில் குப்பையில்லா பகுதிகள் மேற்கொள்ளப்பட்டகளஆய்வில் சாலைகளில் குப்பைகளை கொட்டிய தனிநபர் மற்றும் நிறுவனங்களிடமிருந்து திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி ரூ.39 ஆயிரம் அபராதம்வசூலிக்கப்பட்டுள்ளது.

1.திருவொற்றியூர் நெடுஞ்சாலை, 2. மணலி காமராஜர் சாலை, 3. மாதவரம் ஜி.என்.டி. ரோடு, 4. ரெட்ஹில்ஸ் சாலை, 5. தண்டையார்பேட்டை - திருவொற்றியூர் நெடுஞ்சாலை, 6. ராயபுரம்- பூந்தமல்லி நெடுஞ்சாலை, 7. திரு.வி.க.நகர் பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு), 8. அம்பத்தூர் - ரெட்ஹில்ஸ் சாலை, 9. அண்ணாநகர் - பூந்தமல்லி நெடுஞ்சாலை, 10. தேனாம்பேட்டை கத்தீட்ரல் சாலை, 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, 12. கோடம்பாக்கம் - தியாகராயா சாலை, 13. பூந்தமல்லி நெடுஞ்சாலை, 14. வளசரவாக்கம் - பூந்தமல்லி நெடுஞ்சாலை, 15. ஆலந்தூர்- ஜி.எஸ்.டி. சாலை, 16. அடையாறு - எலியட்ஸ் கடற்கரை சாலை. 17. பெருங்குடி - இராஜீவ் காந்தி சாலை, 18. சோழிங்கநல்லூர் - ராஜீவ் காந்தி சாலை.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

# உத்தரப்பிரதேசத்திலிருந்து ஜாக்குவார் காரில் கொள்ளையடிக்க சென்னை வந்த 2 பேர் கைது



சென்னை, பிப்ரவரி 21 2023: உத்தரப்பிரதேசத்திலிருந்து ஒரு ஜாக்குவார் காரில் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு சென்னை வந்தவர்களில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து சென்னை போலீசார் கூறியதாவது:-

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த இர்பான், நாடு முழுவதும் பல்வேறு கொள்ளை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இவருடைய மனைவி, பஞ்சாயத்து தலைவராக அங்கு இருந்து வருகிறார். இவர்கள் தனபால் சிங் என்பவரிடமிருந்து ஜாகுவார் காரை வாங்கியுள்ளனர். பிறகு இந்த ஜாகுவார் காருக்கு ரூ.75 ஆயிரத்துக்கு மேல் பெட்ரோல் போட்டுக்கொண்டு, ஒரு கும்பலுடன் சென்னை வந்துள்ளான். இங்குள்ள தொழிலதிபர்களின் வீடுகளில் கொள்ளையடிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி சென்னை வந்து நீலாங்கரையில் உள்ள வீடுகளை நோட்டமிட்டுள்ளனர். பிப்ரவரி 6 ஆம் தேதி இர்பான் தனது கூட்டாளிகளுடன் ஒரு வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். ஆனால் காவலாளி கூச்சலிட்டதால் அங்கிருந்து தப்பியோடி மற்றொரு வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். சுல்தான் என்பவருக்குச் சொந்தமான அந்த வீட்டில் வெறும் 1000 ரூபாய் ரொக்கம் மற்றும் சில காலணிகளை திருடிக் கொண்டு வெளியே வந்துள்ளனர்.

இது குறித்து சுல்தான் காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்துள்ளார். சிசிடிவி காட்சிகளைக் கொண்டு பிப்ரவரி 6ஆம் தேதி இரவு ஒரு ஜாகுவார் கார் அப்பகுதியை சுற்றி சுற்றி வந்ததை போலீசார் கண்டுபிடித்தனர். உடனடியாக கார் எண்ணைக் கொண்டு உரிமையாளர் தனபால் சிங் என்பவரை தொடர்பு கொண்டு பேசினர். இதற்குள் அந்தக் கார் தடா சுங்கச்சாவடியை தாண்டியதை அறிந்தனர். ஆனால் காரின் நம்பர் பிளேட் மாற்றப்பட்டுள்ளது.

தொடர் விசாரணை நடத்திய போலீசார் உத்தரப்பிரதேசம் சென்று சுனில் குமாரின் சகோதரர் ராஜேஷ் குமார் மற்றும் புனித் குமாரை கைது செய்தனர். கொள்ளைக் கூட்டத் தலைவன் இர்ஃபானை தேடி வருகிறார்கள். 80,000 ரூபாய்க்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டு சென்னை வந்த கொள்ளையர்கள் குறித்த தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

# சிரியா மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்: 15 பேர் பலி



சென்னை, பிப்ரவரி 21 2023: நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சிரியாவில், உயர்மட்ட பாதுகாப்பு போடப்பட்டிருந்த டமாஸ்கஸ் குடியிருப்பு பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் ராணுவ வீரர் ஒருவர் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

2011-ஆம் ஆண்டு சிரியா-இஸ்ரேல் இடையே போர் தொடங்கியதில் இருந்து, இஸ்ரேல் அதன் அண்டை நாடுகளுக்கு எதிராக நூற்றுக்கணக்கான வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்த நிலையில் நேற்று மூத்த அதிகாரிகள், பாதுகாப்பு ஏஜென்சிகள் மற்றும் உளவுத்துறை தலைமையகம் இருக்கும் டமாஸ்கஸ் குடியிருப்பு பகுதியில் 10 மாடி கட்டிடம் மீது சிரியா ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த வான்வழி தாக்குதலில் ஒரு ராணுவ வீரர் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. மேலும் குடியிருப்புகளை நோக்கி இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளது. பலர் காயமடைந்தள்ளனர்.

சிரிய அரசின் ஆதரவுடன் இயங்கி வரும் ஹெஸ்போலா அமைப்பினை குறிவைத்து ஏற்கனவே நுற்றுக்கணக்கான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில், தற்போதும் அவர்களை குறிவைத்தே இந்த தாக்குதல்களை நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சிரியா மற்றும் துருக்கியில் கடந்த பிப்ரவரி 6 -ஆம் தேதி அன்று ஏற்பட்ட பேரழிவு தரும் நிலநடுக்கங்களுக்குப் பிறகு 46,000 -க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். துருக்கியில் இறந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 41,000 ஆக உள்ள நிலையில், அண்டை நாடான சிரியாவில் 5,800 க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடந்து 2 வாரம் கூட ஆகாத நிலையில், இந்த பேரிழப்பிலிருந்து மீண்டு வருவதற்குள் இஸ்ரேல்-சிரியா மீது நடத்தியுள்ள இந்த ஏவுகணை தாக்குதல் 'மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாக' கருதப்பட வேண்டும் என்று சிரியா வெளியுறவுத்துறை அமைச்சர் பைசல் மெக்தாத் கூறியுள்ளார்.

# ஈரோடு இடைத்தேர்தல்: மாதிரி வாக்குப்பதிவு



சென்னை, பிப்ரவரி 21 2023: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் 27-ந்தேதி நடைபெற உள்ள நிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடந்தது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 27-ந்தேதி நடைபெறவுள்ளது.

தி.மு.க. கூட்டணி சார்பில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், அண்ணா தி.மு.க. சார்பில் கே.எஸ்.தென்னரசு, தே.மு.தி.க. சார்பில் ஆனந்த், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 77 பேர் களத்தில் உள்ளனர். தற்போது தேர்தலில் போட்டியிடும் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்து வருகிறார்கள். இதனால் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலால் களை கட்டி உள்ளது. கிழக்கு தொகுதியில் எந்த வீதிகளில் சென்றாலும் அரசியல் கட்சியினர் ஊர்வலமாக சென்று தீவிரமாக வாக்குகளை சேகரித்து வருகிறார்கள்.

வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்கும் வகையில் ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 238 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இத்தொகுதியில் 77 பேர் போட்டியிடுவதால் ஒரு வாக்குச்சாவடி மையத்தில் 5 மின்னணு வாக்குப்பதிவு யந்திரங்களும், ஒரு கட்டுப்பாட்டு யந்திரமும், வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை பார்க்கும் வசதி உள்ள வி.வி. பேட் யந்திரமும் வைக்கப்பட உள்ளது.

வாக்குசாவடிகளில் பயன்படுத்தப்பட உள்ள 1,386 வாக்குப்பதிவு யந்திரங்களில் புகைப்படத்துடன் வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தும் பணி கடந்த சனிக்கிழமை தொடங்கியது. இந்த பணியினை ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான கிருஷ்ணனுண்ணி, தேர்தல் பொது பார்வையாளர் ராஜ்குமார் யாதவ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதற்கிடையே வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி தொடங்கியது. இதற்காக 238 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் வீடு, வீடாக சென்று வாக்காளர்களை சரி பார்த்து பூத் சிலிப் வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், இடைத்தேர்தலுக்கு பயன்படுத்தப்படவுள்ள யந்திரங்களில் ரேண்டம் முறையில் 5 சதவிகிதம் யந்திரங்கள் தேர்வு செய்யப்பட்டு மாதிரி வாக்குப்பதிவு செய்யும் பணி தொடங்கியுள்ளது.

இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் நடைபெற்று வரும் மாதிரி வாக்குப்பதிவில், ஒவ்வொரு யந்திரத்திலும் 1,000 வாக்குகள் பதிவு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டது.

# ராபிடோ ஆட்டோ மற்றும் சென்னை பெருநகர காவல் துறை இணைந்து சென்னையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்







சென்னை, பிப்ரவரி 21 2023: இந்தியாவில் ஆட்டோ டாக்ஸி சேவை வழங்கும் துறையில் முன்னணி நிறுவனமான ராபிடோ ஆட்டோ, சென்னை பெருநகர காவல் துறை உடன் இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஏற்பாடு செய்தது. இந்த பிரச்சாரமானது சென்னையில் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான சாலை சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது மற்றும் நகரின் இரண்டு முக்கிய போக்குவரத்து சிக்னல்களான மயிலாப்பூர் லஸ் கார்னர் சிக்னல் மற்றும் சாந்தோம் ஹை ரோட்டில் உள்ள லைட் ஹவுஸ் சிக்னல் ஆகியவற்றில் நடைபெற்றது.

இந்த பிரச்சாரமானது, பயிற்சித் திட்டம் மட்டுமின்றி, பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த செய்திகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகத்திலும்ஈடுபட்டது. ஹெல்மெட்கள் அணிவதன் முக்கியத்துவம், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுதல், வாகனம் ஓட்டும்போது எச்சரிக்கையாக இருத்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்த செய்திகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த செய்திகள் ஒலிபெருக்கி மூலம் ஒளிபரப்பப்பட்டு மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிகழ்வுகள் பொதுமக்கள் மற்றும் ஆட்டோ கேப்டன்களிடமிருந்து உற்சாகமான பங்களிப்பை பெற்றன மற்றும் போக்குவரத்து இயக்கத்தை கருத்தில் கொண்டு முறையே சுமார் 20 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

சாலை பாதுகாப்பு விதிகளின் முக்கியத்துவம் குறித்து ராபிடோ ஆட்டோ ஊழியர்கள் நடத்திய மைம் (விகட) நிகழ்ச்சி இந்த நிகழ்வின் சிறப்பம்சமாகும். இந்த நிகழ்ச்சியானது, சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நிறுவனம் மேற்கொண்ட முயற்சிக்கு பாராட்டப்பட்டு, பொதுமக்களிடமும், காவல்துறை அதிகாரிகளிடமும் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த ராபிடோ ஆட்டோ -வின் இணை நிறுவனர் பவன் குண்டுபள்ளி, "ஒரு பொறுப்பான பயண - சேவை தளமாக, விபத்து இல்லாத இந்தியாவை உருவாக்க நாங்கள் எங்கள் பங்களிப்பை வழங்குவோம் என்று நம்புகிறோம். இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் சாலை பாதுகாபு விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் இந்த இலக்கை நோக்கி நாங்கள் பணியாற்றி வருகிறோம். இந்த முன் முயற்சிக்காக சென்னை பெருநகர காவல்துறையுடன் இணைந்து செயல்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இது சென்னையில் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான சாலை சூழலை உருவாக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். சென்னையில் ராபிடோ ஆட்டோவின் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம், பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உதவிய ஒரு வெற்றிகரமான நிகழ்வாகும். இந்தியாவில் பாதுகாப்பான மற்றும் அதிகப் பொறுப்பான சாலைச் சூழலை உருவாக்குவதற்குப் பங்களிக்க அதிகமான கார்ப்பரேட் நிறுவனங்கள் முன்வருவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், போக்குவரத்து பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ராபிடோ ஆட்டோ தீவிர பங்கு வகிக்கிறது. போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் வாகனம் ஓட்டும் போது பொறுப்புடன் நடந்துகொள்வதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்குக் கற்பிப்பதில் இந்த நிறுவனத்தின் முயற்சிகள் கவனம் செலுத்துகின்றன. இந்த நிறுவனம் ஏற்கனவே பெங்களூர் மற்றும் ஹைதராபாத்தில் பல வெற்றிகரமான பிரச்சாரங்களை ஏற்பாடு செய்துள்ளது மேலும் தனது முயற்சிகளை இந்தியாவில் உள்ள மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளது.

விபத்து இல்லாத சென்னையை உருவாக்க உதவும் வகையில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையுடன் கூட்டுசேர இந்த நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. சென்னையின் சாலை பாதுகாப்பு சூழ்நிலையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் விரிவான சாலை பாதுகாப்பு திட்டத்தை உருவாக்க காவல்துறை மற்றும் பிற பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பது, இந்த நிறுவனத்தின் நோக்கமாக இருக்கிறது.

# சரத் பவாரிடம் சரணடைந்த உத்தவ் தாக்கரே: அமித் ஷா



சென்னை, பிப்ரவரி 21 2023: சரத் பவாரிடம் உத்தவ் தாக்கரே சரணடைந்து விட்டதாக, அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

உள்துறை அமைச்சர் அமித் ஷா புனேவில் நடக்கும் இடைத்தேர்தலில் பிரசாரம் செய்துவிட்டு, கோலாப்பூரில் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசியதாவது: ரூ முதலமைச்சராக வேண்டும் என்பதற்காக உத்தவ் தாக்கரே சரத் பவாரிடம் சரணடைந்து விட்டார். பிரதமர் மோடியின் மிகப்பெரிய கட்அவுட்டை வைத்து எங்களுடன் சேர்ந்து தேர்தலைச் சந்தித்துவிட்டு, தேர்தல் முடிவுகள் வந்தவுடன் சரத் பவார் காலில் விழுந்து சரணடைந்து விட்டார்.

தேர்தல் கமிஷனின் முடிவு வரவேற்கத்தக்கது. இனி உத்தவ் தாக்கரே தரப்பினர் பாடம் கற்றுக்கொள்வார்கள். வஞ்சகத்தால் சில நாள்களுக்கு நீங்கள் அதிகாரத்துக்கு வரலாம். ஆனால், தேர்தல் களத்தில் வெற்றி பெற தைரியம் வேண்டும்" என்று தெரிவித்தார். மேலும் 2024-ம் ஆண்டு நடக்கும் மக்களவைத் தேர்தலில் 48 தொகுதிகளிலும் வெற்றி பெறவேண்டும் என்று தொண்டர்களிடம் கேட்டுக் கொண்டார்.

அமித் ஷா பேச்சு குறித்து உத்தவ் தாக்கரே மும்பையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியபோது, புனே வந்துள்ள அமித் ஷா, இன்றைய நாளை மிகவும் நல்ல நாள் என்று கூறியிருக்கிறார். அவர்களுடன் சென்ற அடிமைகளுக்கு சிவசேனாவின் வில் அம்பு சின்னத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார். எனது வீட்டிலிருந்து என்னை வெளியேற்றியிருக்கிறார்கள். திருடர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வந்திருக்கிறது.

முன்பெல்லாம் பொதுக்கூட்டங்களில் மோடியின் முகக்கவசத்தை மக்கள் அணிந்தனர். ஆனால், இப்போது பால் தாக்கரேவின் முகக்கவசத்தை மோடி அணிகிறார். திருடப்பட்ட வில் அம்புடன் என் முன்பு வாருங்கள். என்னிடம் ஒளிரும் தீபம் இருக்கிறது. என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்று தெரிவித்தார்.

சரத் பவாரிடம் சரணடைந்து விட்டதாக அமித் ஷா கூறியது குறித்து பேசிய உத்தவ் தாக்கரே, "கொள்கைகளை மறந்து ஜம்மு காஷ்மீரில் முஃப்தி முகமது சயத்துடன் கூட்டணி வைத்தது யார் என்று கேள்வி எழுப்பினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஆயுர்வேதத்தின் முன்னோடிகள்

## வைத்தியரத்னா பண்டிதர். திவி கோபாலாச்சாருலு அவர்களின் பரம்பரை ஆயுர்வேத மருத்துவப் பாரம்பரியத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் மருத்துவர்கள்







சென்னை, பிப்ரவரி 21 2023: உலகின் மிகப் பழமையான மருத்துவ முறைகளுள் ஒன்றாக ஆயுர்வேதம் திகழ்கிறது. ஒருவரின் உடல், மனம், ஆகியவற்றை, சம்பந்தப்பட்டவரின் உடல் அமைப்புக்கு ஏற்றாற்போல சமன்படுத்தும் ஆற்றல் ஆயுர்வேதத்துக்கு உண்டு. இந்திய அரசு, ஆயுஷ் அமைச்சகத்தை உருவாக்கி, நமது பழமையான மருத்துவ முறைகளை மீட்டுருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. பெருந்தொற்றுக் காலத்தில் கபசுரக்குடிநீர், சசி விலாஸ் ஆகிய மருந்துகள், கொரோனா வைரசுக்கு எதிராக சிறப்பாக செயலாற்றின. இவை, அழற்சி தடுப்பு மருந்துகளாகவும், உடற்சூட்டைத் தணிப்பவையாகவும் பாக்டீரியாக்களுக்கு எதிரியாகவும் செயல்படுவதே இதற்கான காரணம் ஆகும். ஆயுர்வேதாஸ்ரமம் (பி) லிமிடெட்டின் நிறுவனர் வைத்யரத்னா பண்டிட் திவி கோபாலாச்சாருலு, நவீன இந்தியாவின் ஆயுர்வேத முன்னோடிகளில் ஒருவர் ஆவார். தெலுங்கு மொழியில் மாதவ நிடணம், அர்க்கபிரகாஷா, பத்யபத்யா முதலிய பல்வேறு ஆயுர்வேத நூல்களை எழுதிப் பதிப்பித்திருக்கிறார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சவால் மிகுந்த காலகட்டத்திலும் ஆயுர்வேதத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க பெரும் பங்களிப்பை அவர் செலுத்தியிருக்கிறார். கடந்த 1930-களில் பிளேக் எனும் கொடிய நோய் பெருகியபோது, சசி விலாஸ், ஹேமாத்ரி பானகம் ஆகிய இரண்டு முக்கியமான மருந்துகளைக்கொண்டு ஆயிரக்கணக்கானோரை காப்பாற்றியிருக்கிறார். சமூகத்துக்கு அவர் ஆற்றிய சேவையைக் கருத்தில்கொண்டு, அன்றைய பிரிட்டிஷ் வைஸ்ராய் ஹார்டிக் பிரபு, 'வைத்யரத்னா' என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார். 1915 ஆம் ஆண்டில் மைசூர் மன்னரிடமிருந்து மதிப்பு மிகு பட்டம் ஒன்றை பெற்றார். அது மட்டுமின்றி, 1922 ஆம் ஆண்டில் தேசிய ஆயுர்வேத மாநாட்டிலும் அவர் சிறப்பிக்கப்பட்டார். இவை தவிர, அரிய பட்டங்களான 'பிஷசிகாமணி', 'ஆயுர்வேத மார்த்தாண்ட' விருதுகளும் 1907 ஆம் ஆண்டில் அவருக்குக் கிடைத்தன. வைத்யரத்னா பண்டிட் டி. கோபாலச்சாருலுவுக்குப் பிறகு தேசிகாச்சாருலு, பொறுப்பை ஏற்றுக்கொண்டதுடன் ஆயுர்வேதாஸ்ரமரத்தை, பன்னாட்டு அளவில் விரிவுபடுத்தினார். அவர் தனது மருத்துவ அறிவு, ஆயுர்வேத நூல்களை இந்தியா மட்டுமல்லாது இலங்கை, பர்மா, பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் கொண்டுசென்றார். அவரைத்தொடர்ந்து அவரது மகன் மருத்துவர். கோபாலச்சாருலு அவ்வமைப்பின் தலைவராக நீண்டகாலம் இயங்கியதுடன் 42 ஆண்டுகள் ஆயுர்வேத மருத்துவ சேவையை நம் நாட்டுக்கு வழங்கினார். அவரையடுத்து அவரது மகன் மருத்துவர் .டி. தேசிகாச்சாருலு பொறுப்பேற்றார். அவரையடுத்து 1988லிருந்து மருத்துவர் டி. ஜெயஸ்ரீ, எஸ் ஏ எம் எச்-ன் தலைமைப் பொறுப்பேற்று தனது சேவையை தொடங்கினார். டாக்டர். ஜெயஸ்ரீ தேசிகாச்சாருலு, வைத்யரத்னா பண்டிட் டி. கோபாலச்சாருலுவின் பரம்பரையில் 5 ஆவது தலைமுறை மருத்துவர் ஆவார். ஸ்ரீ ஆயுர்வேதிக் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் 50,000க்கும் அதிகமான நோயாளிகளையும் 200க்கும் மேற்பட்ட கோவிட் நோயாளிகளையும் வெற்றிகரமாக குணப்படுத்தியிருக்கிறார். அமெரிக்காவிலுள்ள வேர்ல்டு வைடு மீடியா கார்ப்பரேஷன், 2015 ஆம் ஆண்டில் 'இந்திய மருத்துவ ஜாம்பவான்: ஆயுர்வேதம்' என்ற அங்கீகாரத்தைக் கொடுத்தது. அவர், 0-16 வயதுக்குட்பட்டோருக்கு ஆயுர்வேத தடுப்பு மருந்தை (ஸ்வர்ண ப்ரஷ்ணா) உருவாக்கி வழங்கினார். பொது ஊட்டச்சத்து மற்றும் நீரிழிவு, மூட்டு வலி, தோல் நோய்கள், எடைக்குறைவு, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் கொழுப்புச்சத்து தொடர்பான 45க்கும் மேற்பட்ட மூலிகை மற்றும் ஆயுர்வேத மருந்துகளைக்கண்டறிந்து, காப்புரிமையும் பெற்றுள்ளார். மேலும், 2016 ஆம் ஆண்டில் ஸ்ரீ மருத்துவமனையில் ஆயுர்வேத அறுவை சிகிச்சைப் பிரிவைத்தொடங்கினார். டாக்டர்.டி.ஸ்ரீகிருஷ்ண தேசிகாச்சாருலு, ஸ்ரீ மருத்துவ குழுமத்தின் 6 ஆவது தலைமுறை வாரிசு ஆவார். 2012ல் அவர் ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைப் படிப்பை முடித்ததிலிருந்து 5000க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளித்திருக்கிறார் . மேலும், யோகா, மருத்துவ ஜோதிடம், என்.எல்.பி, பிராணிக் ஹீலிங் ஆகிய அனைத்து மருத்துவமுறைகளையும் ஒருங்கிணைத்த அணுகுமுறையில் மருத்துவசேவையை வழங்கிவருகிறார். டி.வி.எஸ், ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ், இன்ஃபோசிஸ் முதலிய கார்ப்பரேட் நிறுவனங்களில் 130 இலவச மருத்துவ முகாம்களை நடத்தியிருக்கிறார். 'நீங்களே உங்கள் மருத்துவர்' என்ற இவரது திட்டத்தில் பொதுமக்களுக்கான உடல் நல ஆலோசனைகள், உடல் அமைப்பு குறித்த சுய பரிசோதனை ஆகியவை அடக்கம். இது, ஆயுர்வேதத்தை மக்களிடம் கொண்டுசெல்லப் பெரிதும் உதவியது. இவரது மேற்பார்வையின்கீழ், ஆயுர்வேதத்தில் காது-மூக்கு-தொண்டை மருத்துவம், கண் மருத்துவம், ஆயுர்வேத இதய மருத்துவத்துறைகள் அறிமுகம் செய்யப்பட்டன. ஜெயஸ்ரீ தேசிகாச்சாருலு மற்றும் டி.ஸ்ரீகிருஷ்ண தேசிகாச்சார்லு ஆகிய இரு மருத்துவர்களும் கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பல்வேறு அமைப்புகளின் இணைய கருத்தரங்குகளுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டன. நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை நுணுக்கங்களை அவற்றில் பகிர்ந்தததன்மூலம் பலரையும் கொரொன வைரஸிலிருந்து காக்க முடிந்திருக்கிறது. டி. ஸ்ரீரங்க தேசிகாச்சாருலு, 2020-ல் இவ்வமைப்பில் இணைந்தார். அவரது தலைமையின்கீழ் உற்பத்திப்பிரிவு, பல்வேறு மைல்கற்களை எட்டியது எனலாம். அவரது டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவின் காரணமாக, மருத்துவமனையில் புதிய தொழில்நுட்பத் தரநிலைகள் எட்டப்பட்டுள்ளன. நிறுவனத்தின் இயங்கும் செயல்முறைகளை அவர் ஒழுங்குபடுத்தியுள்ளதன் மூலமாக சாதகமான பலன்கள் கிட்டியுள்ளன. கடந்த 200 ஆண்டுகளாக, புகழ்பெற்ற ஆயுர்வேதக் குடும்பத்தின் வாயிலாக உருவான மருத்துவர்களும் சிகிச்சையாளர்களும் ஆயுர்வேத மருத்துவத்தின் முகத்தையும் அதன் செயல்முறையையும் பெருமளவு மாற்றியுள்ளனர். பல தலைமுறைகளைக் கண்ட இக்குடும்பம், சமூகத்துக்கும் பொதுமக்களுக்கும் தொடர்ந்து, கண்ணும் கருத்துமாக சேவையாற்றிவந்துள்ளது. பண்டிட்டின் 150 ஆவது பிறந்த நாளில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் மருந்தகங்களில் சிறந்து விளங்கும் குடும்பங்களுக்கு வம்ச வைத்யா விருதுகள் தொடங்கப்பட்டுள்ளன. நூற்றாண்டு காலமாக வேத கால மருத்துவத்தைச் செய்துவரும் பாரம்பரியத்தை அங்கீகரித்து, உலகத் தரமான மருத்துவ வசதிகளை உருவாக்குவதுடன் வேத மருத்துவ சூழலைப் பரப்புவதுமே இவ்விருதுகளின் முக்கிய நோக்கமாகும். முதல் 'வம்ச வைத்யா' விருதுகள், பிப்.24, 2023 அன்று, சென்னை வடபழனியில் உள்ள கிரீன் பார்க் ஓட்டலில் நடக்க இருக்கும் நிகழ்ச்சியின்போது வழங்கப்படும்.

# இந்திய டிரக்கிங் சமூகத்திற்கு வாகனக் காப்பீட்டை வழங்க வாஹக் கவர்ஸ்டேக்குடன் இணைகிறது

Vahak

coverstack

சென்னை, பிப்ரவரி 21 2023: வாஹக், இந்தியாவின் மிகவும் நம்பகமான போக்குவரத்து சமூக தளம், இன்று கவர்ஸ்டேக்குடன் ஒரு மூலோபாய கூட்டுறவை அறிவித்தது, ஒரு டிஜிட்டல் பி2பி காப்பீட்டு உள்கட்டமைப்பு தீர்வு தளம்.

வாஹக், ஐஐடியர்கள் கரண் ஷாஹா மற்றும் விகாஸ் சந்திராவத் ஆகியோரால் 2019 இல் இணைந்து நிறுவப்பட்டது, அது தற்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 சதவீதத்திற்கு மேல் பங்களிக்கும் இந்திய தளவாடத் துறையை டிஜிட்டல் மயமாக்கும் பணியில் உள்ளது. தலாஜிஸ்டிக்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் 250 பில்லியன் டாலர் லாஜிஸ்டிக்ஸ் துறையின் மத்தியில், இந்தியாவின் மிகப்பெரிய போக்குவரத்து எஸ்எம்இக்கள், கப்பல் ஏற்றுமதி செய்பவர்கள் மற்றும் லாரி/கப்பற்படை உரிமையாளர்களை அதன் இணையதளம் மற்றும் பயன்பாட்டில் வளர்த்து வருகிறது. கவர்ஸ்டேக் பிஃஎப்எஸ்ஐ தொழில்துறை வீரர்களுக்கு தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் காப்பீட்டு உள்கட்டமைப்பை வழங்குகிறது. காப்பீடு வாங்கும் சந்தையில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கவர்ஸ்டேக், ஒரு பூஜ்ஜியக் குறியீடு, பயன்படுத்தத் தயாரான, டிஜிட்டல் முறையில் காப்பீட்டை வாங்குவதற்கும் சேவை செய்வதற்கும் முழுமையான அடுக்குத் தளத்தை வழங்குவதன் மூலம் வெகுஜனத்தை அடைய உதவுகிறது.

இந்த ஒத்துழைப்புடன், இந்திய டிரக்கிங் சமூகத்திற்காக கவர்ஸ்டேக்கின் அதிநவீன காப்பீட்டுத் தொழில்நுட்பத்தை வாஹக் கொண்டு வரும், இது டிஜிட்டல் காப்பீட்டு செயல்முறைகளை திறமையாகவும், வேகமாகவும், செலவு குறைந்ததாகவும் மாற்றும். வாஹக்கின் செயலியில் இந்த தொழில்நுட்ப அடுக்கின் ஒருங்கிணைப்பு அடுத்த 2 மாதங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வாஹக்கின் இணை நிறுவனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான கரண் ஷாஹா, இந்த ஒத்துழைப்பைப் பற்றி விவரித்தபோது, "வாஹக்கில், டிரான்ஸ்போர்ட்டர்கள், ஃப்ளீட் உரிமையாளர்கள் மற்றும் டிரக்கர்களின் நல்வாழ்வைக் கவனிக்கும் நம்பகமான போக்குவரத்து சமூக தளத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம். கவர்ஸ்டேக்குடனான எங்கள் ஒத்துழைப்பு, வாகனக் காப்பீட்டைப் பெறுவதற்கு மிகவும் வசதியான மற்றும் செலவு குறைந்த வழியுடன் இந்திய டிரக்கிங் சமூகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எங்களின் கூட்டு முயற்சி இந்திய டிரக்கிங் சமூகத்திற்கு அதிக மன அமைதியையும் பாதுகாப்பையும் தரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

கவர்ஸ்டேக்கின் தலைமைச் செயல் அதிகாரி சஞ்சிப் ஜா மேலும் கூறுகையில், "இந்த ஒத்துழைப்பு இந்திய டிரக்கிங் துறையில் புதுமையையும் மதிப்பையும் கொண்டு வரும் என்று நாங்கள் நம்புவதால், வாஹக்குடன் கூட்டு சேருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இரு நிறுவனங்களின் பலத்தையும் மேம்படுத்துவதன் மூலம், பயனர்கள் தங்கள் விரல் நுனியில் சிறந்த மோட்டார் காப்பீடு வாங்கும் அனுபவத்தைப் பெறுவார்கள். ஆழ்ந்த ஒருங்கிணைப்புகள் காப்பீட்டுத் துறைக்கு புதிய வழிகளைத் திறந்துவிட்டன, காப்பீடு மற்றும் காப்பீடு அல்லாத வீரர்களுக்கு சில மாதங்களுக்குள் காப்பீட்டுத் தயாரிப்புகளை டிஜிட்டல் மயமாக்கவோ அல்லது சேர்க்கவோ உதவுகின்றன."

ஒருங்கிணைப்பிற்குப் பின், வாஹக்கின் இயங்குதளத்தில் மாதாந்திர செயலில் உள்ள அரை மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள், போட்டி விலையில் நேரடியாக இந்த செயலியின் மூலமாக மோட்டார் காப்பீட்டை வாங்க முடியும். இதற்கெல்லாம் மேலாக இதன் மூலம், வாஹக் அதன் விஏஎஸ் போர்ட்ஃபோலியோ, ஜிபிஎஸ், பாதுகாப்பான மற்றும் இடரற்ற பணம் செலுத்துதல், டிஜிட்டல் பிராண்ட் உருவாக்கம் மற்றும் தளவாட விநியோகம், தேவை மற்றும் அளிப்பு பக்க பிளேயர்களுக்கான நெட்வொர்க்கிங் ஆகியவற்றை, உண்மையான விலை கண்டுபிடிப்பு மற்றும் திறமையான ரிட்டர்ன் லோட் புக்கிங் அம்சங்களுடன் சுமை-லாரி பொருத்துதலிற்கான அதன் முக்கிய ஏஜ மற்றும் எம்எல் தொழில்நுட்பம்-செயல்படுத்தப்பட்ட சந்தைக்கும் கூடுதலாக விரிவுபடுத்தியுள்ளது.



**இந்தியாவின் ஜி20 ஷெர்பா ஸ்ரீ அமிதாப் காந்த் மற்றும் ஐக்கிய நாடுகளின் இந்திய ஒருங்கிணைப்பாளர் ஷோம்பி ஷார்ப் ஆகியோர் வெள்ளிக்கிழமை 'மாடல் ஜி20 கலந்துரையாடல் - இளைஞர்களுக்கான வாழ்க்கை' நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில், ஐக்கிய நாடுகள் சபையின் இந்திய ஒருங்கிணைப்பாளர் ஷோம்பி ஷார்ப் பேசுகையில், "காலநிலை நடவடிக்கையில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது" என்றார். பல்வேறு நாடுகளை ஒன்றிணைப்பதற்கும், வளர்ச்சியுடன் கூடிய காலநிலை மாற்றத்தின் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கவனம் செலுத்துவதற்கும் நாடு பொருத்தமான நிலையில் உள்ளது என்றும் அவர் கூறினார். இந்த சந்திப்பு ஜி20 கூட்டத்தின் உருவகப்படுத்துதல் பயிற்சியாக இருந்தது, அங்கு பள்ளி மாணவர்கள் ஜி20 இன் பிரதிநிதிகளின் பாத்திரங்களை எழுதினார்கள் மற்றும் யூத் ஃபார் லைஃப் (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) பற்றி விவாதித்தனர்.**